[2010 ஏப்ரல் 21

**78—**

**ஹஜ் பயணம்**

***104316—திரு. து. ரவிக்குமார்:**

*மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஹஜ் பயணம் செல்பவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*2001 ஆம் ஆண்டு முஸ்லீம் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்திய ஹஜ் குழுவானது மாநிலங்களுக்கான ஹஜ் பயண இருக்கைகள் ஒதுக்கீடு செய்கிறது. இதன்படி தமிழ்நாட்டிற்கான 2009 ஆம் ஆண்டினுடைய ஒதுக்கீடு 2700 ஹஜ் இருக்கைகள் ஆகும். அதற்குப் பின்னாலே, நம்முடைய தமிழகத்தின் மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களும், மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அவர்களும் ஹஜ் பயண இருக்கைகளைக் கூடுதலாக ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி, அதன்மூலமாக 2700 என்று இருந்ததை கூடுதலாக 1116 இருக்கைகளை அதிகப்படுத்தி, கடந்த ஆண்டுக்கு 3816 + 8 குழந்தைகள் உட்பட்ட நபர்கள் புனித ஹஜ் பயணம் மேற்கொண்டனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் ஹஜ் பயணம் செய்வதற்கான பயணிகளுடைய எண்ணிக்கை குறித்து சவுதி அரேபியா அரசாங்கம்தான் முடிவு எடுக்கிறது. இந்தியாவிற்கு என்று இங்கே இருக்கின்ற இஸ்லாமியர்களுடைய மக்கள்தொகை அடிப்படையிலே இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. அவற்றை மத்திய அரசு, மாநிலங்களுக்கு இடையே பகிர்ந்து அளிக்கிறது. இது, மாநிலங்களிலே இருக்கின்ற இஸ்லாமியர்களின் மக்கள் தொகையை மட்டுமே கணக்கெடுத்து செய்யப்படுகிறது. உதாரணமாகப் பார்த்தால், நம்முடைய

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 21]

மாநிலத்திலே இன்றைக்கு சுமார் 15,000 பேர் இந்த ஆண்டு ஹஜ் பயணம் செல்வதற்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். பல மாநிலங்களிலே இதிலே ஆர்வம் காட்டாத நிலை இருக்கிறது. எனவே, நாம் நம்முடைய மாநிலத்தினுடைய ஒதுக்கீட்டைக் கூடுதலாகக் கேட்டுப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், ஹஜ் பயணம் செல்கின்றவர்கள், அங்கே சென்று தங்குவதற்கான இடத்தை, ஏற்கெனவே, advance-ஆக booking செய்வதற்கு மத்திய அரசு ஹஜ் பயணிகளிடமிருந்து பணம் பெற்று அதைக் கொண்டுதான் செய்கிறது. அப்படி அவர்களிடம் பணம் வசூலித்து அதைக்கொண்டு அங்கே booking செய்யும்போது காலதாமதம் ஏற்பட்டு நல்ல இடம் கிடைக்காத ஒரு நிலை உருவாகிறது. எனவே, மத்திய அரசு முன்கூட்டியே தன்னுடைய தொகையிலிருந்து அந்த இடத்தினை booking செய்துவிட்டு, அதற்குப் பிறகு ஹஜ் பயணிகளிடமிருந்து அந்தத் தொகையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாநிலத்திலிருந்து ஹஜ் பயணம் செல்ல விண்ணப்பிப்பவர்களுடைய அந்த எண்ணிக்கையின் கூடுதல் அளவைக் கருத்தில்கொண்டு அதை உயர்த்துவதற்கு, சிறப்பு நேர்வாகக் கருதி, நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, இந்திய அரசுக்கு சவுதி அரேபியாவின் மொத்த ஒதுக்கீடு--quota--1,23,211 இருக்கைகள். அதில் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளவை 2,700 இருக்கைகள். அந்தக் கணக்கீட்டின்படி எல்லா மாவட்டங்களுக்கும் இருக்கைகள் ஒதுக்கப்படுகின்றன. அவர்கள் நல்ல யோசனையைச் சொன்னார்கள். அதாவது, ஹஜ் பயணிகளின் தங்கும் இடத்திற்கான அட்வான்ஸ் புக்கிங் செலவை மத்திய அரசே ஏற்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையை, இந்த அரசு, மத்திய அரசுக்குத் தெரிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும், கடந்த

TRUTH ALONE TRIUMPHS

காலங்களின் கணக்குகளைப் பார்த்தால், 2006-இல் மனு செய்தவர்கள் 4,978 பேர்கள்; 2007-இல் 6,766 பேர்கள்; 2008-இல் 10,508 பேர்கள்; 2009-இல் 16,735 பேர்கள். இப்படி ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே போகிறது. அதன் அடிப்படையில் இந்த அரசும், மத்திய அரசிடம் முயற்சி செய்ததன் அடிப்படையிலே, 2006 ஆம் ஆண்டிலிருந்து 3,821, 3,703, 3,586 மற்றும் 3,241 என்று கணக்கிட்டு இருக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது மத்திய அரசின் ஆணையின்படிதான் செயல்படுத்தப்படுகிறது.

அங்கு தங்குவதற்கான இட வசதியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். மாநில அரசைப் பொறுத்தவரை, ஆண்டுதோறும் ஹஜ் கமிட்டிக்கு நிர்வாக செலவிற்கு பயணிகளுக்கு 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்குகிறது. தங்குவதற்கான இடவசதி, பார்வையிடுவதற்கு மற்றும் ஹஜ் பயணிகளின் தொண்டு ஆகியவற்றுக்கு 14 இலட்சம் ரூபாயும், மற்ற செலவுகளுக்கு 2 இலட்ச ரூபாயும் மாநில அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல; மத்திய அரசிடமிருந்து வருகின்ற ஒதுக்கீடுகளைக் குலுக்கல் முறையில் மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்துகின்றன. இன்னொன்று; இந்த ஆண்டிலிருந்து புதிதாக மத்திய Haj Committee முடிவு செய்ததன்மூலமாக, மூன்று ஆண்டுகள் தொடர்ந்து மனு செய்தவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் அடிப்படையில், அவர்களைக் குலுக்கல் இல்லாமலேயே தேர்ந்தெடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மீதமுள்ளவர்களைக் குலுக்கல் முறையிலே தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற அந்த நியதி கடைப்பிடிக்கப்படும். ஹஜ் பயணம் மேற்கொள்பவர்கள் மன நிறைவோடு சென்று வருகின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ் பயணிகளுக்கு தற்காலிக விசாவை சவுதி அரேபிய அரசாங்கம் வழங்கி வருகிறது. ஹஜ் பயணம் மேற்கொள்பவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அங்கே தங்க நேர்ந்துவிட்டால், அவர்களையெல்லாம் சவுதி அரேபிய அரசாங்கமே பிடித்து, அவர்கள் பொறுப்பிலேயே விமானத்தின்மூலமாக அனுப்பிவிடுகின்றார்கள். இதற்கிடையிலே அத்தகைய பயணிகள்

2010 ஏப்ரல் 21]

அங்கே Jeddah என்கிற இடத்திலுள்ள ஒரு பெரிய பாலத்தின் கீழே கிடக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் ஒவ்வோர் ஆண்டும் அப்படி இருக்கின்ற நிலை ஏற்படுகிறது. கடந்த ஆண்டுகூட தமிழகத்தைச் சார்ந்த 300-க்கும் மேற்பட்ட பயணிகள் அங்கே சிக்கித் தவித்தபோது, அந்தத் தகவலை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், முதல்வர் அவர்களுடைய தலையீட்டின்பேரில், அவர்களெல்லாம் அங்கிருந்து கொண்டு வரப்பட்டார்கள். ஆக, ஒவ்வோர் ஆண்டும் இதுபோன்ற நிலை ஏற்படுகின்றது. இதைத் தவிர்ப்பதற்காக, முன்கூட்டியே அங்கே இடத்தை book செய்துவிட்டு, அதற்குப் பிறகு ஹஜ் பயணத்திற்கான தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கையை மத்திய அரசு எடுக்க வேண்டும். அதற்கு நமது அரசு, மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த இஸ்லாமியர்களின் சார்பாக ஹஜ் பயணிகள் நல்ல முறையில் சென்று வரவேண்டுமென்று மத நல்லிணக்க உணர்வோடு இந்தக் கேள்வியைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** உங்கள் அனைவருக்கும் சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாளிகையில் மத நல்லிணக்கத்தோடு நேற்று என்னுடைய அருமைத் தம்பி கௌஸ் பாஷா அவர்கள் அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலைப் பற்றியும், இன்றைக்கு நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்கள் ஹஜ் பயணங்கள் பற்றியும் பேசி, இந்தச் சபையின் சிறப்புக்கு ஒரு சிறப்பைச் சேர்த்தமைக்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தியாவிலிருந்து வருடந்தோறும் 1,25,000 பேர் ஹஜ் பயணம் மேற்கொள்வதாகச் சொன்னார்கள்.

[2010 ஏப்ரல் 21

நான் ஒரு ஹஜ் கமிட்டி மெம்பர். மாண்புமிகு கலைஞர் முத்தமிழ் அறிஞர், இந்த ஹஜ் பயணிகளின் எண்ணிக்கையைக் குறைந்தபட்சம் 25 ஆயிரம் அதிகமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே வேறு யாரும் கேட்கவில்லை. நம்முடைய தமிழகத்தைச் சார்ந்த நம்முடைய கலைஞர் அவர்கள்தான் இந்திய மக்களுக்காக, தமிழர்களுக்காக மட்டுமல்ல; இந்திய மக்களுக்காக 25 ஆயிரம் உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டு, அது மத்திய அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே அந்தப், பரிசீலனை எந்த அளவிலே இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஹஜ் கமிட்டியின் தலைவராகிய, பிரசிடெண்ட் ஹோட்டல், திரு. அபு அவர்களிடம் சொல்லி, திரு. அபு அவர்களும் இதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதை விரைவிலே நிறைவேற்றித் தர அமைச்சர் ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கிறேன். நன்றி.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்த மாதம் 1 ஆம் தேதியிலிருந்து புனித ஹஜ் பயணம் செய்கிறவர்களிடம் மனுக்கள் கோரப்பட்டிருக்கின்றன. இந்த மாதம் 30 ஆம் தேதியோடு மனுக்கள் பெறுவது முடிவடைகிறது. அதற்குப் பின்புதான் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு எத்தனை பேர் அனுப்பப்பட வேண்டுமென்ற கணக்குத் தெரிவிக்கப்படும். இதற்கிடையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் சொன்னதுபோல, ஒவ்வொரு மாநிலத்திற்கும் எத்தனை நபர்களை அனுப்ப வேண்டுமென்று ஒரு கணக்கு இருக்கிறது. அவர்கள் சொன்னதுபோல, அந்த மாநிலத்திலே செல்லாதவர்கள், மீதி இருக்கின்றவர்கள் கணக்கையெல்லாம் மத்திய சர்க்கார் மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கின்ற வாய்ப்பிருக்கிறது. இதற்கு முன்னாலே இருக்கிற கணக்கை எடுத்துப் பார்த்தோமானால், முதலிலிருந்து, கிட்டத்தட்ட, இப்பொழுதல்ல ஒரு 10 ஆண்டுக் காலமாக, இஸ்லாமிய சமுதாயத்திற்காக, பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி, அதன்மூலமாகக் கிட்டத்தட்ட ஒவ்வொரு வருடமும் 1,000, 1,500 என்று இருக்கைகள் அதிகமாகப்

2010 ஏப்ரல் 21]

பெற்று, இதுவரை அனுப்பிய சிறப்பைப் பெற்றவர்கள் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள். அதற்காக இஸ்லாமியச் சமுதாயம் அவருக்கு நன்றி பாராட்டுகிறது. அதேநேரத்தில், இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்த இருக்கைகள் அதிகமாகக் கேட்பது என்பது, ஒரு முறை நான் டெல்லிக்குச் சென்று இருந்தபோதுகூட, அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களே சொன்னார். 'உங்கள் முதலமைச்சர் அவர்களிடம் சொல்லுங்கள், முடிந்த அளவிற்கு நாங்கள் தமிழகத்திற்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். தமிழகத்திலேதான் சிறுபான்மைச் சமுதாயத்திற்கு இந்த அரசு பாதுகாப்பாகவும், அரவணைப்புடனும் இருக்கிறது' என்பதைத் தெரிவித்து, என்னிடம் நன்றி சொல்லச் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு, இன்றைக்குத் தமிழகம் இந்திய அளவிலேயே மத நல்லிணக்கத்திற்கும், சிறுபான்மைச் சமுதாயத்தைப் பாதுகாக்கிற அரசு என்று இந்திய அளவிலே பெயர் பெற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இஸ்லாமியப் பெருமக்கள், புனித ஹஜ் பயணம் மேற்கொள்வதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் மனு செய்த அத்துணைப் பேர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசிடம் கலந்துபேசி வழிவகைகள் செய்தார்கள். அதைப்போல, இந்த வருடமும் புனித ஹஜ் பயணம் செய்ய மனு செய்திருக்கின்ற இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் இந்த அரசு அனுமதி வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சியில், மனு செய்த அத்துணைப் பேரையும் அனுப்பி வைத்ததாகச் சொன்னார்கள். அந்தப் பட்டியல் என்னிடம்

[2010 ஏப்ரல் 21

இருக்கின்ற காரணத்தால் நான் பதில் சொல்லலாம் என்று கருதுகிறேன். 2001-ல் மனு செய்தவர்கள் 3,035 பேர்; 11 குழந்தைகள். அப்பொழுது ஹஜ்-க்கு அனுப்பியது நீங்கள் அல்ல; மத்திய ஹஜ் கமிட்டி 2,898 பேர் 8 குழந்தைகள். 2002-ல் 2,808 பேர்; 7 குழந்தைகள். அனுப்பப்பட்டது 2,688; 6 குழந்தைகள். 2003-ல் 2,766; குழந்தைகள் 3. அனுப்பப்பட்டது 2,756; குழந்தைகள் 3. அதைப்போல, 2004, 2005, 2006 இந்த கணக்கும் ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். நாளுக்கு நாள் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. அப்பொழுதெல்லாம், 2,800, 2,600 விண்ணப்பங்கள்தான் வரப்பெற்றன. 2006 I ஆம் ஆண்டிலே 4,007 பேர் மனு செய்திருக்கிறார்கள். 2006 II ஆம் ஆண்டிலே 4,978 பேர் மனு செய்திருக்கிறார்கள். இதில் என்ன நடக்கிறது என்றால் அத்துணைப் பேரையும், மனு செய்தவர்களையெல்லாம் அனுப்பலாம் என்று நாம் வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாமே தவிர, முறைப்படி இந்திய சர்க்கார் ஒரு முடிவு செய்ய வேண்டும். அவர்கள்தான் அந்தக் கணக்கைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) இது கேள்வி நேரமா? அல்லது மானிய நேரமா? மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டே இப்படிப் பேசிக்கொண்டிருப்பது நியாயமா? புனிதமான ஒரு கேள்வியைக்கூட நீங்கள் கொச்சைப்படுத்துகின்ற அளவிற்குப் பேசிக்கொண்டிருக்கிறீர்களே! நான் கேட்பது (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். திரு. சிவபுண்ணியம் பின்னர் கேட்கலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. ஆர். வைத்திலிங்கம், உங்கள் இரண்டு பேருக்கும் சொல்கின்றேன். அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்; நீங்கள் இடையில் குறுக்கீடு செய்து, இடையூறு செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** கடந்த 2009-லே மனுச் செய்தவர்கள் 16,735 பேர், அனுப்பப்பட்டவர்கள் 3,816 பேர். ஆகவே இந்த அரசைப் பொறுத்த அளவில் கடந்த ஆண்டு நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 1,116 பேருக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் அதிகமாகப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இன்னும்

2010 ஏப்ரல் 21]

தொடர்ந்து செய்வார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**79—**

புறவழிச் சாலை

***4423—திரு. தா. உதயசூரியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆகிய நகரங்களில் புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கள்ளக்குறிச்சி நகரத்திற்கு ரூ.35.17 கோடி செலவில் 5.100 கிலோ மீட்டர் நீளமுள்ள புறவழிச் சாலையும், சின்னசேலம் நகரத்திற்கு ரூ.37.94 கோடி செலவில் 4.600 கிலோ மீட்டர் நீளமுள்ள புறவழிச் சாலையும் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்தச் செய்திக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு,